# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.87/2022 | Date | : 18.07.2023 |
| Deposition of Witness for | : அ.சா.7 | Taluk | : மேட்டூர் |
| Name | : சுதாகரன் | Calling | : SI |
| Father / Husband Name | : பச்சமுத்து | Religion | : இந்து |
| Village | : ஊஞ்சப்பட்டி | Age | : 33 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.07.2023.

(1, 2, 3-ம் எதிரிகள் ஆஜர்.. **எதிரிகளின் வழக்கறி**)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது எடப்பாடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.10.2021-ம்தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது சேலம் மாவட்டம், சங்ககிரி கிளை, இந்தியன் வங்கி மேலாளர் ரித்தீஷ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.456/2021 பிரிவுகள் 457, 511 இதச-ஆக வழக்கு பதிவு செய்தேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகாருடன் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், இவ்வழக்கினை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மதியம் சுமார் 13.50 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சீனிவாசன் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து

சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன் (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அன்றைய தினமே சாட்சிகளான ரித்தீஷ்குமார், கவிப்பிரியா, வினோத்குமார், சீனிவாசன் மற்றும் முருகேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) இவ்வழக்கின் எதிரிகளை கண்டறியும் பொருட்டு கடந்த 08.11.2021-ம் தேதி சுமார் 14.00 மணிக்கு போலீஸ் பார்ட்டியுடன் சங்ககிரி காவல் நிலைய எல்லை பள்ளிப்பாளையம் பிரிவு ரோடு தீரன் சின்னமலை நினைவு தூண் அருகில் ஈரோடு மற்றும் குமாரபாளையம் பகுதிகளிலிருந்து வரும் வாகனங்களை தணிக்கை செய்து கொண்டிருந்தபோது ஈரோடு பக்கமிருந்து வந்த TN 02 AY 4984 என்ற பதிவெண் கொண்ட Swift காரை நிறுத்தி சோதனை செய்தபோது வாகனத்தை ஓட்டி வந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த பூபாலன் என்பவர் முன்னுக்குபின் முரணாக பதிலளித்தால் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த ஜெகதீசன் என்பவரையும் விசாரணை செய்ததபோது அவரும் சரியான பதிலளிக்காமல் இருந்ததாலும், இருவரையும் தனித்தனியே விசாரித்தபோது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் என தெரியவந்தது. மேற்படி குற்றங்களை ஒப்புக்கொண்டவர்களை அன்றைய தினமே பகல் 15.00 மணிக்கு முறைப்படி கைது செய்து விசாரிக்க எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன் வந்தார்கள். அப்போது தகவல் சொல்லி வரவழைக்கப்பட்ட சாட்சிகளான சதீஷ்பிரபு, கிராம நிர்வாக அலுவலர், சங்ககிரி மற்றும் சண்முகம், கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் அன்றைய தினமே பகல் 15.30 மணிக்கு எதிரி பூபாலன் என்பவரை சுமூகமான சூழ்நிலையில் வைத்து எந்தவிதமான அச்சுருத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி விசாரிக்க சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரியிடம் கையொப்பமும், சாட்சிகளிடம் சாட்சி கையொப்பமும் பெற்றேன். அப்போது எதிரி பூபாலன் ATM இயந்திரத்தை உடைக்க பயன்படுத்திய பொருட்களான TN 02 AY 4984 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுவிஸ்ட் கார்-1, பிரவுன் கலர் ரெயின் கோட்-1, புளூ, ஆரஞ்சு, கத்தரிபூ கலரில் வெள்ளை கோடு போட்ட கட்டம் போட்ட முழு கை சர்ட்-1, எடுத்து

ஆஜர் செய்ததை அன்றை தினமே பகல் 16.40 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் (**ATM இயந்திரத்தை உடைக்க பயன்படுத்திய பொருட்களை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.11 ஆகவும், புகைப்படத்திலுள்ள TN 02 AY 4984 என்ற பதிவெண் கொண்ட மாருதி சுவிஸ்ட் கார்-1 அ.சா.பொ.1 ஆகவும், பிரவுன் கலர் ரெயின் கோட்-1 அ.சா.பொ.2 ஆகவும், புளூ, ஆரஞ்சு, கத்தரிபூ கலரில் வெள்ளை கோடு போட்டு கட்டம் போட்ட முழு கை சர்ட்-1 அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

4) அன்றைய தினமே பகல் 17.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி ஜெகதீஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதில் எதிரியிடம் கையொப்பமும், சாட்சிகளிடம் சாட்சி கையொப்பமும் பெற்றேன். அன்றைய தினமே பகல் 18.10 மணிக்கு எதிரி ஜெகதீஷ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கின் தடயங்களான பச்சை நிற ஆக்ஸிஜன் சிலிண்டர்-1, ஆக்ஸிஜன் ரெகுலேட்டரில் இரண்டு பிரசர் மீட்டர்கள் பொருத்தியது-1 , புளூ மற்றும் சிகப்பு நிற ரப்பர் ஓஸ் மற்றும் பித்தளை நாசிகளுடன் கூடிய கேஸ் வெல்டிங் செட்-1, அதற்கு தேவைப்படும் ஸ்குரு டிரைவர்-1, லைட்டர் -1, கேஸ் சிலிண்டர் ஓப்பனிங் சாவி-1, சுமார் 5 கிலோ எடையுள்ள LPG சிலிண்டர் -1 அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன் (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.12 ஆகவும், பச்சை நிற ஆக்ஸிஜன் சிலிண்டர்-1 அ.சா.பொ.4 ஆகவும், ஆக்ஸிஜன் ரெகுலேட்டரில் இரண்டு பிரசர் மீட்டர்கள் பொருத்தியது-1 அ.சா.பொ.5 ஆகவும், புளூ மற்றும் சிகப்பு நிற ரப்பர் ஓஸ் மற்றும் பித்தளை நாசிகளுடன் கூடிய கேஸ் வெல்டிங் செட்-1 அ.சா.பொ.6 ஆகவும், ஸ்குரு டிரைவர்-1 அ.சா.பொ.7 ஆகவும், லைட்டர் -1 அ.சா.பொ.8 ஆகவும், கேஸ் சிலிண்டர் ஓப்பனிங் சாவி-1 அ.சா.பொ.9 ஆகவும், சுமார் 5 கிலோ எடையுள்ள LPG சிலிண்டர் -1 அ.சா.பொ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

5) எதிரிகள் இருவரும் கொடுத்த வாக்குமூலத்தில் இவ்வழக்கின் மூன்றாவது எதிரியான முகமது ரியாஷ் என்பவரை கைது செய்ய எதிரிகளுடன்

பள்ளிப்பாளையம் TVS மேடு என்ற முகவரிக்கு சென்று மூன்றாவது எதிரியான முகமது ரியாஷ் என்பவரை அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தவரை எதிரி ஜெகதீசால் அடையாளம் காட்ட அன்றைய தினமே பகல் 19.15 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி முறைப்படி கைது செய்தேன். அதே இடத்தில் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 19.20 மணிக்கு அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதில் எதிரியிடம் கையொப்பமும், சாட்சிகளிடம் சாட்சி கையொப்பமும் பெற்றேன். அன்றைய தினமே அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி முகமது ரியாஷ் என்பவர் எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கின் தடயங்களான கருப்பு கலர் ஸ்பிரே டைப் டப்பா-1, கருப்பு கலர் ரெயின் கோட்-1 ஆகியவைகளை 20.20 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன் (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.13 ஆகவும், கருப்பு கலர் ஸ்பிரே டைப் டப்பா-1 அ.சா.பொ.11 ஆகவும், கருப்பு கலர் ரெயின் கோட்-1 அ.சா.பொ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர் அன்றைய தினமே எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை பாரா காவலர் வசம் ஒப்படைத்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கு சொத்துக்களில் ஆக்சிஜன் சிலிண்டர் ஒன்று காலி நிலையில் உள்ளது என்றும், அதனால் வெடிக்கும் தன்மையோ, தீ பிடிக்கும் தன்மையோ இல்லை என்றும் மகா சக்தி ஏர் புராடெக்ட்ஸ், சங்ககிரி என்ற நிறுவனத்திலிருந்து சான்றிதழ் பெற்றேன் ( **மகா சக்தி ஏர் புராடெக்ட்ஸ், சங்ககிரியிலிருந்து பெற்ற சான்றிதழ். அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி வழக்கு சொத்துக்களில் LPG சிலிண்டர் ஒன்று காலி நிலையில் உள்ளது என்றும், அதனால் வெடிக்கும் தன்மையோ, தீ பிடிக்கும் தன்மையோ இல்லை என்றும் ஜி.ஆர். பாரத் கேஸ், சங்ககிரி என்ற நிறுவனத்திலிருந்து சான்றிதழ் பெற்றேன் (**ஜி.ஆர். பாரத் கேஸ், சங்ககிரியிலிருந்து பெற்ற சான்றிதழ். அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி ஜெகதீஷ், பூபாலன் மற்றும் முகமது ரியாஷ் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை தனித்தனியே

மூன்று படிவம் -91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் (**மூன்று படிவம் -91 முறையே அ.சா.ஆ.16 முதல் அ.சா.18 வரையாக குறியீடு செய்யப்படுகிறது**).

7) பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண். 456/2021 பிரிவுகள் 457, 380 r/w 511 இதச-வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.07.18 14:42:16 +0530

Sd /- Suthakaran

Judicial Magistrate No.1,
Sankari.